நீர்வளத்துறை

TNWRD

அனுப்புனர்
பொறி.அ.நித்தியானந்தன், எம். டெக்.,
செயற்பொறியாளர், நீவது,
ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம்,
திருச்சி-1.

பெறுநர்
திரு.சுரேஷ்குமார்,
த/பெ.ஐயம்பெருமாள்,
எண்.7, பள்ளி கூடத்தெரு,
மேல்கல்கண்டார் கோட்டை,
திருச்சி மாவட்டம்

கடித எண் : 366/2025/கோ. 30 (கபு)/வ2/நாள் : 21.05.2024

அன்புடையீர்,

பொருள் : பாலம்- திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், பழங்கனாங்குடி கிராமம், அரவாக்குறிச்சி ஏரியின் உபரி நீர் செல்லும் வடிகாலின் கிளை வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைக்க அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 1) மனுதாரர் மனு நாள்: 24.01.2025
2) உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., க.பு.உ.ப கோட்டம், திருச்சி.
க.எண் : கோ. 11/2025/நாள் :07.05.2025.

.....

பார்வை 1-ல் காணும் மனுதாரர் கடிதத்தில் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், பழங்கனாங்குடி கிராமம், புல எண் : 7/3A2B-ல் அமைந்துள்ள நிலத்தினை அணுகிட ஏதுவாக அரவாக்குறிச்சி ஏரியின் உபரி நீர் செல்லும் வடிகாலின் கிளை வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைக்க அனுமதி கோரியுள்ளீர்கள்.

மேற்காணும் பொருள் தொடர்பான இடம் பார்வை 2-ல் காணும் உதவி செயற்பொறியாளரால் தள ஆய்வு செய்யப்பட்டதில் பாலம் அமைவிடப்பகுதியானது திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், பழங்கனாங்குடி கிராமம், புல எண் : 7/3A2B-ல் ஆகும். மேற்காணும் பழங்கனாங்குடி கிராமம், புல எண் : 7/3A2B-ல் உள்ள நிலத்திற்கு செல்வதற்கு அரவாக்குறிச்சி ஏரியின் உபரி நீர் செல்லும் வடிகாலின் கிளை வாய்க்காலின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்பதால் மேற்படி வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைத்து கொள்ள பரிந்துரை செய்து அறிக்கை பெறப்பட்டது இப்பாலம் அமைப்பதால் பாசன நீருக்கு இடையூறு இல்லாத காரணத்தினாலும், உதவி செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின் பேரிலும், அரவாக்குறிச்சி ஏரியின் உபரி நீர் செல்லும் வடிகாலின் கிளை வாய்க்காலின் குறுக்கே மனுதாரர் சொந்த செலவில் இரு இடங்களில் பாலம் அமைக்க கீழ்காணும் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1) இந்த பாலமானது வாய்க்காலின் படுக்கை மட்ட அளவான 1.75 மீட்டர் அகலத்திற்கு குறையாமலும், 1.80 மீட்டர் உயரத்திற்கு குறையாமலும் (Vent Size 1.75M x 1.8M) மனுதாரரின் சொந்த செலவில் அமைத்து கொள்ள வேண்டும்.

2) பாலம் நீர்வளத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் கட்டுமான அமைப்பின்படி கட்டப்படவேண்டும். பாலங்கள் கட்டுமானம் பணியின் பொழுது இத்துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, இத்துறை களப்பணியாளர்கள் முன்னிலையில் பணி மேற்கொள்ளுதல் வேண்டும். பாலம் கட்டுமான பணிகள் வாய்க்காலில் தண்ணீர் செல்லாத காலங்களில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

3) பாலம் அமைக்கும் பொழுதும், பயன்பாட்டில் உள்ள பொழுதும் வாய்க்காலின் நீரோட்டத்திற்கு எவ்வித தடையும் ஏற்படா வண்ணம் அமைத்தல் வேண்டும். மண்திட்டுகள், இடிபாடுகள், செடிகொடிகள் ஏதுமின்றி தொடர்ந்து பராமரித்தடல் வேண்டும்.

4) பாலம் அமைக்கும் நிலையில் வாய்க்காலின் கட்டிட கட்டுமானங்களுக்கு எவ்வித சேதமும்ஏற்படாவண்ணம் அமைத்தல் வேண்டும். பாலம் கட்டும் பொழுது இருபுறம் கைப்பிடி சுவர்கள் பாதுகாப்பான நிலையில் அமைத்தல் வேண்டும்.

5) பாலத்தின் மேல் மற்றும் கீழ்புறத்தில் வாய்க்காலின் இரு கரைகளிலும் குறைந்தது 5மீ நீளத்திற்கு தடுப்புச்சுவர் கட்டப்படவேண்டும்.

6) பாலம் அமைவிடப்பகுதி 5.00x1.75 = 8.75 சதுர மீட்டருக்கு ஆண்டு தோறும் தரைவாடகை செலுத்தப்பட வேண்டும். பதிவுத் துறை ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நிர்ணயிக்கப்படும் Guideline விலைவிகித அடிப்படையில் பாலத்திற்கு தரைவாடகை வீதம் வருடத்திற்கு ரூ.270/-+GST 18% நடப்பாண்டிற்கு செலுத்தவேண்டும். மேலும் ஒவ்வொரு பசலி ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் தொகையினை பசலி ஆண்டு தொடங்கும் முன்னரே இத்துறைக்கு ரொக்கமாகவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலையாகவோ செலுத்துதல் வேண்டும்.

7) காப்புத்தொகையாக ரூ.25,000/- செலுத்தப்பட வேண்டும்.

8) பாலம் கட்டி முடிக்கப்பெற்றவுடன் அதன் மூலம் எவ்வித உரிமையும் கொண்டாட கூடாது. பாலத்தினை நீர்வளத்துறையின் வசம் ஒப்படைக்க வேண்டும். இப்பாலத்தை பிற பொதுமக்கள் உபயோகிக்க எவ்வித ஆட்சேபணையும் எழுப்பக்கூடாது.

9) வாய்க்கால் பகுதியில் எல்லைக்கற்கள் நட்டு கெட்டி மண் கொண்டு கரைகள் பலப்படுத்தி, ஆக்கிரமிப்புகள் ஏதுமின்றி அதன் தன்மைமாறாமல் பராமரித்திடல் வேண்டும். கரையானது அரசு அலுவலர்களின் தல ஆய்விற்கும், பிற விவசாயிகள் இடுபொருட்கள் கொண்டு செல்லும் வகையில் தடையின்றி பாதுகாக்கப்படவேண்டும்.

10) கட்டுமானப்பணியின் போது கரைகளில் உள்ள மரங்களுக்கோ, கட்டுமானங்களுக்கோ, கரைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படுத்தக்கூடாது. அவ்வாறு நேரிடின் மனுதாரர் தனது சொந்த செலவில் தரத்துடன் சரிசெய்திடல் வேண்டும்.

11) பாலம் கட்டுமான பணியின் போது உயிர்க்கோ, உடமைக்கோ எந்த பாதிப்புமின்றி பணி மேற்கொள்ளப்படவேண்டும். எவ்வித இழப்பிற்கும் நீர்வளத்துறை பொறுப்பேற்காது.

12) பாலம் கட்டி முடித்த பின்னர் மீதமுள்ள பொருட்களை உடனே அப்புறப்படுத்த வேண்டும். தண்ணீர் போக்கிற்கு எவ்வித இடையூறும் இருக்கக்கூடாது.

13) துறை ரீதியாக அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படவேண்டும்.

14) பாலம் கட்டி முடித்தவுடன் அதனை புகைப்படம் எடுத்து இத்துறைக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

15) பாலம் கட்டும் பொழுது நெடுஞ்சாலைத்துறையின் கையேட்டில் (Highway Manual) வரைபடங்களில் குறிப்பிட்டபடி தொழில் நுட்ப குறியீடுகளின்படி கட்டப்பட வேண்டும். தரமான கைப்பிடி (Crash barrier) அமைக்கப்பட வேண்டும்.

16) பிற்காலத்தில் வாய்க்காலின் முன்னேற்ற பணிகளுக்கு பாலம் இடையூறாக இருப்பின் பாலத்தை அகற்ற இத்துறைக்கு உரிமை உண்டு.

17) இப்பாலத்தினை வேறு நபருக்கு பெயர் மாற்றம் செய்வதோ, விற்பனை செய்திடவோ அனுமதிக்கப்படும் உபயோகத்திற்கு தவிற பிற உபயோகங்களுக்கு மாற்றம் செய்திட நீர்வளத்துறையின் முன் அனுமதி அவசியமாகும். (Appendix XIII C Tamilnadu Public Work Department Code)

18) இப்பாலம் குறித்து ஏதேனும் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டாலோ, அரசுக்கு இடையூராக அமையும் நிலை ஏற்பட்டாலோ அல்லது மேற்கண்ட நிபந்தனைகள் ஏதும் மீறப்பட்டாலோ முன் அறிவிப்பின்றி இவ்வனுமதி உடனே இரத்து செய்யப்பட்டு பாலத்தினை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19) மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது குறித்து மனுதாரர் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுத்து மூலம் அளிக்க வேண்டும்.

செயற்பொறியாளர், நீவது.
ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம், திருச்சி.

19/5/25